*Editor's Note*

Please address all communication for the English pages to **The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 143 JAFFNA, FRIDAY, 25th FEBRUARY, 1983 No. 8

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 35/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.

## Hartley College

*Hartley College* founded by Rev. Peter Percival, a Wesleyan Missionary in *1833*, completes 150 years of service in education this year. A new two storeyed building has been declared open by Mr. K. Thurairatnam M. P. Hartley College is named after Rev. Marshall Hartley, Secretary for the Far East of the Mission, who visited the school in 1916 and laid the Foundation stone for a Chemistry Laboratory.

The recent history of the College is bound up with Mr. K. Pooranampillai who was Principal of the school from 1944 for more than 14 years and Mr. W. N. S. Samuel who has been Principal for the last ten years.

## The Sri Lankan EL Dorado

The 60,000 Sri Lankans employed in the oil rich sheikdoms would, according to Central Bank projections, remit Rs. 10 billion to the country in 1983.

The Department of Immigration and Emigration has geared itself to the issue of passports. Nearly 1000 applications are received on each working day and another 1000 for renewals of those who have a job ready in the Middle East.

Tea, the major foreign exchange earner is likely to be pushed into second place if the Rs. 10 billion reaches the country before the end of this year.

A *Riyol* is now about sixty rupees in Sri Lankan currency.

## A Peace Concert with a 500 - Voice Youth Choir

The Gymnasium of the University of Peradeniya was the venue on 19-2-83 of a Youth program organised by the Kandy Y. M. C. A. in which 500 voices (trained and presented by Lylie Godrige) sang a four part harmony on the theme "Peace, Love and Joy".

Lylie Godridge also led the audience in a sing-song of popular community songs.

The Choir were chosen from schools in Kandy, Gampola and Kegalle.

---

*Personal*

*Mr. J. S. S. Anantham,* the Assistant Food Controller, Jaffna has left for Bangkok to attend the UN Conference on Production and Quality Control of Food Grains as the representative of the Food Department, Sri Lanka.

Mr. Anantham is an old Boy of Union College, Tellippalai. He is Chairman of the Northern Province Boys' Scout Association and a member of the Executive Committee of St. Mary's Church, Kopay.

## The Sri Jayawardhanapura Hospital

The 1001 bed Sri Jayawardhanapura Hopital costing Rs. 800 million, is an outright gift from the Japanese government to Sri Lanka and is nearing completion.

The Japanese construction firm *Kume* which is handling the construction has informed the Health Minister that the building will be eanded over in September this year.

It will the most uptodate General Hospital in the country with a staff of some 100 doctors. It would function as any other General Hospital with an OPD to cater to the people of the area.

As the Health Department has to operate within the constraints of a light budget, the problem of adequate funds to ensure peak efficiency would have to be solved.

## Judicial Appointments in the North

Mr. T. Joganathan, the Kilinochi Magistrate has been promoted as District Judge and transferred to Batticaloa. Mr. V. Kanapathippillai, Attorney-at-Law has been appointed Magistrate, Kilinochi.

Mr. V. Jegasothy, Magistrate Jaffna has been appointed Additional D. J. Jaffna.

Mr. V. Nagarajah, now supernumerary Magistrate will be Magistrate Jaffna.

Mr. V. Kanapathippillai, Primary Court Judge, Pt. Pedro will be Magistrate, Pt. Pedro.

All these appointments became effective from 14-2-83.

## Live Poetry Reading

In a program of Live Poetry Reading sponsored by the British Council, audiences in Kandy were given an opportunity of listening to the poetry of Jean Arasanayagam, Prof. Ashley Halpe, Suvimalee Karunaratne and Kamala Wijeratne by the poets themselves.

The program was held at the British Council Library in Kandy. The audience was presented with copies of the poems in a book of 20 pages.

Many more such readings have been planned for the future, which will include not only poetry but also excerpts from prose works, especially the novel and the short story.

We wonder if many would be interested in such a programme in Jaffna. We are happy that live poetry or prose reading as a literary exercise is catching in Sri Lanka.

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
VADDUKODDAI

**NEW ADMISSIONS FOR 1983/84**

Applications for admission to Technician courses commencing in May 1983 are accepted till 31st March, 1983. Students of either sex under 20 years of age who have passed six subjects at G. C. E. O. L. including Maths, Science and English can apply. Courses are conducted in English medium with explanations in Tamil.

Three year Technician Diploma course is offered in the following Engineering fields:

| | *Fees per year* |
|---|---|
| (1) Electronics | Rs. 1,000/- |
| (2) Electrical | Rs. 750/- |
| (3) Mechanical | Rs. 750/- |
| (4) Air Con. & Refrigeration | Rs. 750/- |
| (5) Building Construction | Rs. 750/- |
| (6) Automobile | Rs. 500/- |

One year Craft courses are offered in Welding Technology, Foundry Practice and Machine shop Practice at Rs. 750/- per year.

Application forms and prospectus at Rs. 5/- available at Office. Closing date 31-3-83. Apply to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai.

**JAFFNA CHRISTIAN UNION**

Service of Thanksgiving for the Life and Work of

THE REV. A. C. THAMBYRAJAH

**in St. Peter's Church, Jaffna**

on Saturday 12th March 1983 at 5 p. m.

All friends are cordially invited.

**Remember also:**

J. C. U. United Services on

- Asia Sunday: 15 May 1983 in St. Peter's Church, Jaffna at 5 p. m.
- Advent Sunday: 27 November 1983 in St. John's Church, Chundikuli at 5 p. m.
- Unity Sunday: 22 January 1984 in C. S. I. Church, Uduvil at 5 p. m.

**S. N. Sugunananthan,**
Secretary.

Vaddukoddai.

JAFFNA COLLEGE

**PRIZE - GIVING**

on

Thursday 10th March, 1983

at

6.00 p. m.

*Chief Guests:*

**Professor John Walter Bicknell**

&

**Mrs. Evangeline Bicknell**

Parents, Alumni and Friends are cordially invited.

**A. Kadirgamar,**
Principal.

Jaffna College,
Vaddukoddai.

---

*IN BRIEF*

- *The Filipino Government* has issued a directive encouraging the nation's 100,000 public school teachers to make a spiritual retreat once a year at government expense.
- *The Rev. J. B. Philips,* one of the foremost translators of the Bible into contemporary English passed away recently.

**IN MEMORIAM**

IN CHERISHED & EVER-LOVING MEMORY OF

**Marjorie Rosemalar Jeyasingam**

(wife of the late Rev. K. S. Jeyasingam)

March 8th

*"You gave us love in fullest measure*
*Care, devotion, ideals to treasure*
*You shared our hopes, joys and fears*
*We thank you for those precious years,"*

Our Dearest Ammah, Acca,
We affectionately remember you and deeply miss you on this 7th Anniversary.

We thank God for giving you to us.

25, Somasundram Avenue,
Chundikuli.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


### தாரகை ஒளி

கெட்ட நோக்கத்துடன் சொல்லப்படும் உண்மை நீங்கள் உண்டாக்கக்கூடிய சகல பொய் உரைகளையும் விடக் கொடியதாகும்.

— பிளேக்.


மலர் 143 ] 25 — 2 — 1983 [ இதழ் 8


## அஸ்ஸாமில் அவதி

"என்னத்துக்காக அடிச்சுக்கிடறான்
என்பது கூடத் தெரியாமே
சின்னத்தனமான சண்டையிலே
செத்துமடிஞ்சுது தேசச் சனம்."

1947-ம் ஆண்டு இனக்கலவரம் இந்தியாவைக் கலக்கியபொழுது பல்லாயிரக்கணக்கான முஸ்லீம்களும இந்துக்களும் உயிரிழந்தனர். அந்த சோகவரலாற்றை 'காந்தி மகான் கதை" என்ற நூலில் அருமையாகப் படம் பிடித்துக் காட்டினார் கொத்தமங்கலம் சுப்பு. ஏன் அடிக்கிறான் என்பது கூடத் தெரியாமல் பிள்ளைகள், பெண்கள், வயோதிபர் எல்லோருமே அடித்துக் கொல்லப்பட்டனர்.

இன்று இந்தியாவின் வடகீழ் கோடியிலுள்ள அஸ்ஸாம் மாநிலத்தில் மீண்டும் வகுப்புவாதம் சீறுகின்றது. சென்ற வாரம் நடைபெற்ற தேர்தலையடுத்து நடைபெற்ற வன்முறையில் 2500 பேர் வரையில் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அஸ்ஸாம் செழிப்பும், இயற்கை வளப்பும், அமைதியும் குடிகொண்ட மாநிலம் 1970-ம் ஆண்டில் பெருந்தொகையான முஸ்லீம் அகதிகள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அங்கு குடியேறினர். இவர்கள் தமது உரிமைகளுக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் குந்தகமாக வந்துவிட்டனர் என்பது உள்ளூர் வாசிகளின் குற்றச்சாட்டு. அவர்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என்பது அவர்கள் கோரிக்கை. ஆனால் அவர்கள் வாக்குரிமை பெற்று தேர்தலுக்கு ஆயத்தமாகியபொழுது தான் இந்த இரத்தக்களரி.

அன்று நவகாளியில் படுகொலை நடைபெற்றபொழுது அண்ணல் காந்தியவர்கள் கால் நடையாக கிராமங்கள் தோறும் சென்று, அஹிம்சை வெல்லும் "சத்தயமேவா ஜெயதே" என்று உபதேசித்தார் மக்கள் அந்த மகானின் சொல்லைக் கேட்டனர்.

இன்று காந்தியவர்கள் இல்லை. இந்திரா காந்தியவர்கள் சிறுபான்மை மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். பெரும்பான்மை மக்கள் சொல் கேட்பார்களா?

"ஈஸ்வர அல்லா தேரே நாம்
சப்கோ சன்மதி தே பகவான்"

என்று காந்தியடிகள் உபதேசித்த ஒற்றுமை இந்தியாவுக்கு வருமோ? காலந்தான் பதில் சொல்ல வேண்டும்

---

### பரீட்சையில் சித்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில சிறப்புப் பட்டதாரிப் பரீட்சையில் (English Honours Digree Examination) சுண்டிக்குளியைச் சேர்ந்த செல்வி வனிதஜோதி குமாரசுவாமி இரண்டாம் பிரிவில் சித்திபெற்றுள்ளார் இவர் காலஞ்சென்ற வண. R. குமாரசுவாமி திருமதி குமாரசுவாமி அவர்களின் கனிஷ்ட புதல்வியும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியுமாவர்.

### யாழ்ப்பாணத்தில் ஷயர் குடும்பம்

ஊழிய பரிமாற்றத்திட்டத்தின்படி ரேட்ஜலண்ட் கிறிஸ்து சபையைச் சேர்ந்த வண. டேவிட் ஷயரும் குடும்பத்தினரும் மூன்று மாதங்கள் யாழ்ப்பாணத்தில் ஊழியம் புரிய வந்துள்ளனர் இவர் இந்த ஞாயிறு (27-2-83) சாவகச்சேரியிலும் அடுத்த ஞாயிறு வவுனியாவிலும் பிரசங்கம் செய்வாரெனத் தெரிகிறது.

### கொழும்பு - யாழ். துரித ரயில் சேவை

அடுத்த மாதம் 7-ந் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கும் கொழும்பு, காங்கேசன்துறை துரித கடுகதி ரயில் சேவையின் ('இன்ரசிற்றி' எக்ஸ்பிரஸ்) பயணச் சீட்டுக் கட்டணம் எழுபத்தி நான்கு ரூபா, ஐம்பது சதமாக (ஒரு வழி) இருக்குமென்று அறியப்படுகிறது.

நகரங்களுக்கிடையிலான மேற்படி துரித கடுகதி ரயிலின் சாதாரண இருக்கைகள் கட்டணம் எழுபத்தினான்கு ரூபா ஐம்பது சதமாகவும், குளிர் சாதன வசதிகொண்ட இருக்கைகள் சுமார் நூற்றைம்பதொரு ரூபா தொண்ணூறு சதமாக இருக்கும் என்றும், பிரயாணிகள் முதலாம், இரண்டாம் பிரயாண ஆணைப் பத்திரம் சமர்ப்பித்தும் பயணச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாமென்றும், இருநூற்று எழுபத்து ஆறு இரண்டாம் வகுப்பு இருக்கைகளும், முப்பத்திரண்டு முதலாம் வகுப்பு குளிர் சாதன இருக்கைகளும் இருக்குமென்றும் அறியப்படுகிறது.

இப்புகைவண்டி கொழும்பில் காலை 5-45க்குப் புறப்பட்டு காங்கேசன்துறையை பிற்பகல் 12-20க்கு வந்தடையும். காங்கேசன்துறையிலிருந்து 5-45க்குப் புறப்பட்டு கொழும்பை 12-15க்குச் சென்றடையும். கொழும்பிலிருந்து திங்கள், வியாழன், சனிக்கிழமை ஆகிய நாட்களிலும், காங்கேசன்துறையிலிருந்து செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் இது சேவையிலீடுபடுத்தப்படும். கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய புகையிரத நிலையங்களில் மட்டுமே தரித்துச் செல்லும். சகல இருக்கைகளும் முன்கூட்டியே பதிவு செய்து பிரயாணம் செய்யக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இப்புகைவண்டியில் பிரயாணிகளுக்கு சிற்றுண்டிகளும், தேநீர், குளிர்பானம் வழங்குவதற்கு சிறந்த வகையில் ஒரு சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இருக்கைகள் பதிவு செய்யாமல் யாரும் பிரயாணம் செய்ய முடியாது.

---

## கிறிஸ்தவமும் ஆசிய மதங்களின் மறுமலர்ச்சியும்

— பிலோமினு பிகருடோ —

கிறிஸ்தவ மதப் பிரசாரம் ஆசிய சமயங்கள் மறுமலர்ச்சியடைய உதவி புரிந்தன என்றுதான் சொல்ல வேண்டும் கிறிஸ்தவ சமயத் தாக்குதலால் ஆசிய மதங்கள் தம் சமயங்களின் நிலையை உணர்ந்து அதை மேலும் வளர்க்க முயலுவதைக் காணலாம். முன்பு சிறப்பாக இருந்த தொன்று மீண்டும் பூரிப்பை அடைவதுதான் மறுமலர்ச்சியாகும். ஆசிய நாட்டின் மதங்களான இந்து மதம், பௌத்த மதம், இஸ்லாம் என்பன சில முக்கிய பண்புகளுடன் மறுமலர்ச்சியடைந்தன. சமய மறுமலர்ச்சி எங்கு ஏற்பட்டாலும் பொது அடிப்படையான பண்பு இருக்கத்தான் செய்கின்றது.

கிறிஸ்தவ சமயத்தை எதிர்கொள்ள, சில சிந்தனையாளர் அல்லது தலைவர்களின் தாக்கம், சுதந்திரப் போராட்டம், சுதந்திரம் பெறல். தேசிய கலாச்சாரத்தின் பாதிப்பு என்பனவே சமயம் மறுமலர்ச்சி அடைய முக்கிய கருவிகளாக விளங்குகின்றன என்பதில் தவறில்லை. புனித சவேரியார் வருகையோடுதான் ஆசியாவில் கிறிஸ்தவ சமயம் எதிர்கொள்ளத் தொடங்கியது. 19-ம் நூற்றுண்டின் பின் அரசியல் படைப்பலத்தோடு சமயத்தைப் பரப்பத் தொடங்கியதும் கிறிஸ்தவ சமயத்தை எதிர்க்கத் தொடங்கி தமது சமயத்தை சீர்தூக்க முனைந்தனர் தலைவர்கள் சிறந்த சிந்தனைத் தாக்கங்களுடன் தோன்றி சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். ஐரோப்பியர் கிறிஸ்தவ சமயத்தை இணைத்துக் கருதினர். அவ்வாறே சுதந்திரப் போராட்டம் இந்நயாவின் சமயத்திற்கு உதவியளித்தது ஐரோப்பாவில் உலகியல் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தபடியால் ஆன்மீகம் பாதிப்படைந்தது. அதனால் தேசிய கலாச்சாரம் மேம்பாடுடையதாகக் கருதப்பட்டது.

இப்படியான காரணங்களினால் சமயத்தில் மாறுதல்கள் ஏற்படத்தொடங்கின. இந்து சமயம் மதத்தைப்பரப்ப வேண்டும் என்ற எண்ணம் இல்லை உலகு தீயது என்று கூறுவார்கள் நல்லது என்று கூறுர்கள். வாழ்க்கை வெறுப்பு, வாழ்க்கை மறுப்பு, தன்னைப்பற்றியே சிந்தித்தல் என்பதுதான் இம்மதத்தின் ஆணிவேராகும். கிறிஸ்தவ சமயத் தாக்குதலால் ஆசிய சமயங்கள் பிரச்சார நோக்குடையனவாக மாறின. பிரச்சார நோக்கம் எனும்போது உலகமெங்கும் மதப் பிரசாரம் செய்தலாகும். உதாரணமாக சுவாமி விவேகானந்தர் 1899-ல் சிக்காக்கோவுக்குச் சென்று உரையாற்றியதைக் கூறலாம் விவேகானந்தர் சிக்காக்கோவில் சென்று உரையாற்றியது நன்மையைக் கொணர்ந்தது எனலாம். கிறிஸ்தவமும், இஸ்லாமும் துவைதத்தைச் சேர்ந்த வேதாந்தம் புத்தமதம் அதன் உளவியலிலும், அறிவியலிலும் ஒருமை வேதாந்தத்தைச் சேர்ந்ததாகும். உலகத்தில் ஒரேயொரு மதம் இருக்கிறது அதுதான் வேதாந்தம் என்றூர். கிறிஸ்தவ மதப்பிரசாரத்தால் தூங்கிக்கிடந்த சமயங்கள்யாவும் உலகில் தாம் பரவவேண்டுமென விரும்பிகொண்டபடியால் வளர்ச்சியடைய முனைந்து கொண்டிருந்தன. இந்துசமயம் இதுவரை தூங்கிக்கிடந்த சமயங்கள் இன்று உலகப் பிரச்சனைகள் தம் சமயத் தாக்கலினுல் ஏற்படுகின்றன. அதனுல் தம்மைப் பின்பற்ற வேண்டுகின்றன.

இந்து சமயத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை நோக்கினுல் இஸ்லாமியர் 1000 A D இல இந்தியாவென முதன் முதல் அழைத்தனர். இஸ்லாமிற்குப் புறம்பானயாவும் இந்து என அழைக்கப்பட்டது. இந்தியாவில் முகிழ்த்த பல கோடி சமயங்களின் தொகுப்புதான் இஸ்லாம் இஸ்லாமியரின் தாக்குதலினுல்தான் இந்து மதம் தோன்றியது. இந்து என்ற சொல்லை இஸ்லாமியர்தான் கொடுத்தனர். இவர்கள் இந்து என்றதை ஒரு இழிவு நிலையில் தான் வைத்தார்கள். இச்சமயம் பல கோடி சமயங்களின் தொகுப்பு என்றூர்கள். தொடர்புகள் ஏற்பட்டபோது அதாவது போக்குவரத்து, தொலைபேசி, தபால், பேப்பர் இன்னும் பல தொடர்புச் சாதனங்கள் தோன்றிய போதும் சமயங்களிடையேயும் தொடர்புகள் ஏற்படலாயின. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்துக்கள் யாவரும் தமது உயர்ச்சிக்காக உழைக்கத் தொடங்கினர். இந்து சமயம் சமரசப் பண்புடையது. சமரச நோக்கில் மற்றெந்த சமயங்களிலையும்விட உயர்ந்தது. ஏனெனில் எல்லாச் சமயங்களிலிருந்து தோன்றியபடியால்தான் யாவற்றையும் தன்னுடன் இணைந்தமையில் காலம் செல்லச் செல்ல மாற்றம் ஏற்பட்டது. மறுபிறப்பு, சாதிவேற்றுமை இவை இந்து சமயத்தின் ஆணிவேராக இருந்தது. ஆனல் இது இப்போது விஞ்ஞானத் தாக்குதலால், கிறிஸ்தவமதத் தாக்குதலால் இவை அருகிப் போய்விட்டன.

19-ம் நூற்றுண்டில் இந்து சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. ராஜராம் மோகன்ரேய் மாற்றத்தைக் கொண்டு வந்தார் என்று கூறலாம். இவர் சென்ற நூற்றுண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்தவர் கல்கத்தாவிலுள்ள செரம்பூர் என்ற இடத்தில் கிறிஸ்தவ சமயப்பிரசாரம் நடைபெற்றது அவர்களின் செல்வாக்கினுள் வந்த ரேய் இந்து சமயத்தை கிறிஸ்தவத்தின் அடிப்படையில் புனருத்தானம் செய்ய ஆரம்பித்தார் அவருடைய இயக்கம் பிரமோசமாஜ் ஆகும். அதாவது ஒரு தெய்வம் அதாவது ஒரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தினுர் இது புனருத்தான இயக்கம் ஆகும். விக்கிரக ஆராதனை நீக்கப்பட வேண்டும் என்றூர்.


(3-ம் பக்கம் பார்க்க)

# பவுல் திலிக்

## Paul Tillick

— எழுதியவர்: G. T. சில்வா —

(முற்தொடர்ச்சி)

நிசேயா; கால்சிதோன் விசுவாச அறிக்கைகளில் கிறிஸ்துவைப் பற்றின சித்தாந்த விளக்கத்தைப் பார்க்கிறோம். இதைப் பற்றி திலிக் இரண்டு வினாக்களை எழுப்புகின்றார். கிறிஸ்தவச் செய்தி திரிபுபெற்றுத் தவறாகாமல் பாதுகாக்கப்பட்டதா? கிறிஸ்தவச் செய்தி சரியான முறையில் விளக்கம் பெற்றதா? முதல் வினாவிற்கு ஆம் என்று பதிலளிக்கலாம். ஆனால் இரண்டாவதற்கு இல்லை என்றே கூற வேண்டும். ஆதித் திருச்சபையின் பிரச்சனை; கடவுள், மனிதனின் ஒருமைப்பாடு கிறிஸ்துவாகிய இயேசுவில் எப்படி விளங்கியது? மனிதத்தன்மை குறைவுபட்டால் இவ்வுலக வாழ்க்கையில் அவர் முற்றிலும் கலந்து கொண்டாரென்று கூறமுடியாது. கடவுட்தன்மை குறைவுபட்டால் இவ்வாழ்க்கைமீது அவர் பெற்ற வெற்றி முற்றுப்பெற்றதென்று கூறமுடியாது.

எனவே திலிக் என்பவருடைய புதுவாழ்வு என்பதின் தன்மை எனும் சொல் இவ்விடத்தில் முற்றிலும் பொருந்தாத சொல் என்கிறார் திலிக். மனிதத்தன்மை என்றால் மனிதனின் மெய்ம்மைத் தன்மையா அல்லது மனிதனின் உள்ளதான தன்மையா? யேசுக்கிறிஸ்துவைப் பொறுத்தவரையில் மெய்ம்மைத் தன்மையையே இது குறிப்பிட வேண்டும். கடவுளின் தன்மையென்பதும் தவறு. அவர் கடவுளாக இருக்க ஒரு தன்மை பெற்றிருக்க வேண்டும்; என்பது இக்கூற்றின் மறைபொருள், கடவுளுக்கு அப்படி ஒரு தன்மை தேவையில்லை. எனவே மனிதத்தன்மையும்; கடவுட் தன்மையும் கிறிஸ்துவுக்குப் பொருந்தாத கருத்துக்கள்.

கிறிஸ்துவாகிய இயேசுவில் கடவுள், மனிதனின் நித்திய ஒருமைப்பாடு வரலாற்று உண்மையாகிவிட்டது; எனத் திலிக் புது விளக்கம் கொடுக்கிறார். அவதாரம் மகவேற்பு எனும் இரு கருத்துக்களை விவியதநில பார்க்கிறோம். கடவுள் இயேசுவைக் கிறிஸ்துவாக ஏற்படுத்தவே; இயேசுவும் தமது கீழ்ப்படிதலால் அதனை, ஏற்படுத்தவே; இயேசுவும் தமது கீழ்ப்படிதலால் அதனை ஏற்றுக் கொள்கின்றார். பொதுவாக மக்கள் நினைக்கும் முறையில் கடவுள் மனிதனானார் என்பது தவறான கூற்று. கடவுள் தம்மைத் தவிர வேறொன்றும் ஆகமுடியாது; ஒரு தனி நபரின் சிக்கல் நிறைந்த வாழ்க்கையில் ஈடுபட்டுக் கடவுள் வெளிப்பட்டார் என்பதே திலிக்கின் விளக்கம்.

கிறிஸ்துவின் மீட்புச் செயலைப் பற்றிக் கூறுகையில் சிலுவையும்; உயிர்த்தெழுதலும் இரண்டு சின்னங்கள் என்கின்றார். இயல் தன்மை பெற்ற வாழ்க்கை உளதாம் வாழ்க்கைக்குத் தன்னை அடிமைப்படுத்தினதின் அடையாளம் சிலுவை. இவ்வாழ்வின்மேல் வந்த வெற்றிக்கு அடையாளம் உயிர்த்தெழுதல் சின்னம் என்றால் உண்மையற்ற வெறும் அடையாளம் என்பதல்ல பொருள் சின்னம்; உண்மையை விளக்கும் கருவி; மீட்பை விளக்கும் சின்னங்களாகச் சிலுவையும் உயிர்த்தெழுதலும் தாம் கூறவிரும்புவதை ஆற்றலுடன் எடுத்துரைக்கின்றன. சிலுவை யேசுவின் வாழ்க்கையில் தனியாக நிகழ்ந்த தொன்றல்ல. பிறப்பு; எதிர்ப்புக்கு ஒடுதல், ஏழ்மை உயிருக்கு ஆபத்து; தனிமை; துயரம், கெத்சமனே; நீதி விசாரணை இவையனைத்தும் ஒரே சோக வரலாற்றின் பகுதிகள். இவ்வாழ்க்கைக்குள் புகுந்தவரை அழிவுச் சக்திகள் அழிக்க முயன்றன என்பதையே இவை காட்டுகின்றன.

சிலுவையும் உயிர்த்தெழுதலும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க முடியாத நிகழ்ச்சிகளாகும். வெற்றியடைந்தவரின் மரணம்தான் சிலுவை; சிலுவையில் மரித்தவரின் வெற்றிதான் உயிர்த்தெழுதல். இரண்டும் உண்மையான நிகழ்ச்சிகள். விளக்கம் கலந்த நிகழ்ச்சிகள். சிலுவை முற்றிலும் வரலாற்றிற்கு உட்பட்ட நிகழ்ச்சி. மீட்பின் செயல் நிறைவேறினது எனும் விளக்கம் அதற்கு தரப்பட்டது.

உயிர்த்தெழுதல் என்றால் ஒரு தனி மனிதன் மீண்டும் உயிர்பெற்று வந்தான் என்று பொருளல்ல; புது வாழ்வை அளித்தவர் மறைந்து போகவில்லை எனும் நம்பிக்கையே. இயேசுவின் மரணத்திற்குப் பின்னும்; அதாவது புது வாழ்வை அளித்தவர் மறைந்து போனார் என்ற நம்பின வேளையிலும்; புதுவாழ்வின் ஆற்றலைத் தாங்கள் பெற்றதாக அவர்கள் தம் வாழ்க்கையில் உணர்ந்தனர். எனவே இயேசுவைத் திரும்பப் பெற்றதாக அறிந்து கொண்டனர். இதற்கு உறுதியாக ஒரு நிகழ்ச்சியும் நடந்தது. உயிர்த்தெழுதல்; பரமேறுதல்; பெந்தெகொஸ்தே இவை மூன்றும் ஒன்றோடொன்று இணைந்த நிகழ்ச்சிகள் என்கிறார் திலிக்.

---

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின்
இளைப்பாறிய ஊழியனும், நவஜீவனம் ஸ்தாபகருமான
வண. அ. செ. தம்பிராஜா போதகரின் வாழ்க்கைக்காய்
கடவுளுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை
யாழ்ப்பாணக் கிறிஸ்த ஐக்கியத்தினரால்
12-3-1983 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு
யாழ். பரி பேதுரு மெதடிஸ்த ஆலயத்தில் நடாத்தப்படும்
போதகரின் நண்பர் உறவினர் யாவரும் அன்பாய் அழைக்கப்படுகிறீர்கள்.

---

## கிறிஸ்தவமும் ஆசிய மதங்களின் மறுமலர்ச்சியும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் அடிமை நீக்கப்பட வேண்டும். ஆனால் பிற்காலத்தில் கிறிஸ்தவமும் இந்து மதமும் சேர்ந்த சேர்க்கை என்றபடியால் அதிக முன்னேற்றம் அடையவில்லை.

அடுத்தபடியாக இவர் அதாவது தயானந்த சரஸ்வதி இவர் ஒரு முனிவர் கிறிஸ்தவ மதத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்வதற்கு ஒன்றுமில்லை என்றார். வேதங்களுக்குத் திரும்ப வேண்டும் என்னும் கோட்பாடுடையவர் அவருடைய இயக்கம் ஆரிய சமாஜ் என்று அழைக்கப்பட்டது. ஏற்கெனவே கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களை மீண்டும் இந்துக்களாக மாற்றுவது இவருடைய நோக்கமாக இருந்தது.

அடுத்ததாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவர் சகல சமயங்களும் உண்மை என்று கண்டார். அவருடைய இயக்கம் புத்தெளிர்ச்சி இயக்கம் என்று கூறலாம். இவருடைய இயக்கத்தை தொடர்ந்து நடத்தியவர் சுவாமி விவேகானந்தர் முக்கியமான இயக்கங்கள் வட இந்தியாவில் நடைபெற்றது. தென்னிந்தியாவில் நம் நாட்டவர்தான் சென்றனர். ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை என்போர். இந்தியாவின் ஆரம்ப மதம் ஆரிய மதம் — பிராமணம் பௌத்தம் — சமணம் (வடநாட்டில் இருந்துதான் வந்தது?

சைவம் இது தமிழ்நாட்டில்தான் பரவியது. இஸ்லாம் இதே முறையைப் பின்பற்றினார்கள் எனினும் அதிவேகத்தோடு பின்பற்றினர். கிறிஸ்தவம் இந்தியாவில் கடைசியாக வளர்ச்சியுற்ற சமயம்தான் 16-ம் நூற்றுண்டில் ஏற்பட்டது. முதல் நான்கும் இந்தியாவில் இருந்த கூட்டத்தாரிடம் இருந்து ஏற்பட்டது. ஆனால் கிறிஸ்தவம் பிறநாடுகளிலிருந்து வந்த கூட்டத்தாரால் ஏற்படுத்தப்பட்டதாகும். இந்தியாவில் தமிழ்நாடு கேரளம் ஆகியவற்றில் பரவியது. வங்காளம் மலைவாதியினரிடையே கிறிஸ்தவர்கள் பெருகினர். வங்காள இந்துக்கள் எதிர்த்தனர். தர்க்கம் கூடிற்று; இங்கு நாடார் என்ற இனமே கூடிற்று. இங்கு படித்தவர்கள் அதிகம் ஒரு ஆராய்ச்சிக்கண்ணுடன் பார்த்தனர். புனருத்தாரணம் ரோய் தலைமையில் நடைபெற்றது. இந்த சமயத்தை கிறிஸ்தவ ஒளியில் புனர் செய்தார். (1) ஒருமைக் கோட்பாடு (2) விக்கிரக ஆராதனையின்மை. (3) கூட்டு வழிபாடு என்ற அம்சங்களுடன் தம் சமயத்தை வளர்த்தார். பிரமோ சமாஜ் எனப்பட்டது.

கிறிஸ்தவ சமயத்தை பின்பற்றும் தன்மை அதிகம் நீடிக்கவில்லை. கிறிஸ்தவர்கள் சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருந்தவரை தம் வசமாக்கினார்கள். பிராமணர் இதற்குப் பயந்தனர். புத்தெழுச்சி இயக்கம் தயானந்த சரஸ்வதி என்ற பிராமணர் தலைமையில் ஆரம்பித்து கிறிஸ்தவத்தை எதிர்த்தார். சில எல்லாம் ஒரே கடவுள் என்ற உணர்வில் ஆழ்ந்த ஆன்மீகம் நிலவியது. வேதங்களுக்குத் திரும்புவோம் என்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவை யாவும் ஒன்றே என்ற உணர்வுடன் எழுந்தனர். யாழ்ப்பாணத்தில் 1870ல் பிரச்சனை இருக்கவில்லை. ஆனால் அதன்பின் ஆறுமுக நாவலர் கிறிஸ்தவ சமயத்திற்கு மறுத்துப் போராடினார்.

ஆறுமுக நாவலரை எடுத்துக் கொண்டால் அவர் காலத்தில் கிறிஸ்தவ சமயம் தழைத்தோங்குவதையும் தம் நாட்டினதான சைவம் இவர் கண்டார். பேர்சிவல் பாதிரியாரின் தன்னலமற்ற வாழ்க்கையும், சமயப் பற்றும் அவர் ஆற்றி வந்த சமயத் தொண்டுகளும் இவரது மனதைப் பெரிதும் கவர்ந்தன. சிறுவர்கள் கல்வி பயிலுவதற்கான பள்ளிகள் — ஆண்களும் பெண்களும் சென்று வழிபாடு நடத்துவதற்குரிய கோயில்கள் சமய அறிவினை மக்களிடையே பரப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு நெறி முறைகள் இவை யாவும் இவருடைய உள்ளத்தில் ஒரு தனி உணர்ச்சியை எழுப்பின. இதனைத் தொடர்ந்துதான் தம் சமயத்தை வளர்க்க முற்பட்டார். இதற்காக அரும்பெரும் தொண்டாற்றினார். பல பாடசாலைகளை நிறுவினார். பல நூல்களை வெளியிட்டார். சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவற்றிலெல்லாம் "விழிமின் எழுமின் அறியாமையாகிய இருளில் ஆழ்ந்து துயில்-தீர்" உங்கள் முன்னோர் வித்த அருஞ் செல்வமாகிய பழமையைக் கைவிடாதீர் என்று எச்சரிக்கையே செறிந்திருப்பதைக் காணக்கூடியதாக உளது.

எவ்விதமாக நோக்கினாலும் கிறிஸ்தவ மதப் பிரசாரம்தான் ஆசிய சமயங்கள் மறுமலர்ச்சி அடைய மூலகாரணங்களாக இருந்தது எனின் மிகையாகாது.

---

## உங்களுக்குத் தெரியுமா?

இலங்கையில் நிரந்தரமான பொலிசுப் படை இயங்குதல் வேண்டும் என்று 1865ஆம் ஆண்டிலே சட்டசபை தீர்மானித்தது. இன்று நிலவும் பொலிசுப் பகுதிக்குப் பொலிஸ் சேவை என்று பெயர். இது படை அல்ல.

முன்னர் கண்டவிடங்களிலும் பிரேதங்களைப் புதைத்தல் சுடுதல் வழக்கம். ஆனால் 1865 ஆம் ஆண்டிலே சட்டசபை தீர்மானித்தது. இன்று நிலவும் பொலிசுப் பகுதிக்குப் பொலிஸ் சேவை என்று பெயர். இது படை அல்ல.

முன்னர் கண்டவிடங்களிலும் பிரேதங்களைப் புதைத்தல் சுடுதல் வழக்கம். ஆனால் 1866ஆம் ஆண்டு முதல் பொது மயானங்கள் உருவாயின;

கொழும்பிலிருந்து கண்டிக்குப் புறப்பட்ட முதல் வண்டி 21-4-1867இல் கண்டியைக் கண்டது. கண்டி மக்கள் புகைவண்டியை முதலில் கண்டனர்,

கல்வித் திணைக்களம் 1869 ஆம் ஆண்டில் உருவாவதன் முன் 1868இல் பொதுமக்கள் அறிவுறுத்தல் கந்தோர் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கிலாந்திலிருந்து இலங்கைக்குக் கப்பல்கள் குறுக்குப் பாதையால் வருவதற்குச் சுயஸ் கால்வாய் வெட்டப்பட்டு முதல் கப்பல் கொழும்புக்கு வந்தநாள் 10-2-1870 ஆகும்.

இலங்கையில் வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாள் 1-6-1870

இலங்கையின் குடிசன மதிப்பீடு 1973ஆம் ஆண்டில் மதிக்கப்பட்டபோது 1,31,80,000 மக்கள் வசிக்கிறார்கள் எனக் கணக்கிட்டனர். ஆனால் நூற்றாண்டுகளுக்கு முன் 1871ஆம் ஆண்டில் முதன் முதலாக மக்கள் தொகையை மதிப்பிட்டனர், அக்காலத்தில் எங்கள் நாட்டவர் தொகை 24,05287 மாத்திரம்தான்.

ரூபா சதம் என்று கணக்கிடும் வழக்கம் முதன்முதலாக 1-1-1872இல் வந்தது. அதற்கு முன் ஆங்கிலேயர் ஆட்சியில் பவுண், சிலிங், பென்ஸ் என்பன நிலவின; அக்காலத்தில் பவுண் என்றால் பத்து ரூபாதான். இக்காலத்தில் நம்மவர் அதைச் சுமக்க விரும்புகிறபடியால் அது 2700 ரூபாவாகிவிட்டது என்று கேள்வி. நாம் சுமையை இறக்கினால் அதன் விலை தானே குறையும். நெப்போலியன் காலத்தில் அலுமினியம் பொன்னிலும் பார்க்க விலை கூடியதாயிருந்தது. இன்று அலுமினியத் தகடுகள் குப்பையில் கிடக்கின்றன.

நன்றி: M. W. செய்தி.

*EDITORIAL*

## A Wave of Genuine Concern

The mystery of the Upali Learjet with its six people on board (three business executives and three members of the crew) is an event that is unique in our annals. There have been major air disasters earlier. But the wrekage and casualties have been spotted and identified within hours of the crash.

Here is an air disaster where a seven nation search, with some of the most sophisticated array of modern equipment on board the rescue planes, and some of the most trained personnel battling against heavy odds in land, sea and air have not yielded significant results for a protracted period of over ten days. The latest news, at the time of our writing, is the discovery of a wheel from the missing jet off a village along Sumatra's remote coastline.

Whatever the ultimate result of the search, Sri Lanka should derive one great lesson from this grim episode in her annals.

Fanatical ethnic, religious or national chauvinism is difficult to maintain in the backdrop of a common unpredictable destiny that hangs like a pall over this country in the context of our hurricane economic and political developments. The toll of the air, the toll of the road, the toll of human barbarism, make now our headline news.

For the moment (during the period February 13 — 23) people's minds have been taken away from the "Fifth Amendment", from the price - hike of consumer goods (as a result of the increase in the BTT tax) and concentrated on the intriguing disappearance of the Upali Learjet which left Sabang airport at Kualalampur at 8-41 p. m. on 13-2-83 and whose fate is yet to be known.

"Men are cruel but man is kind" said Jahawarlal Nehru. Compassion for others, love for children (as was evident in the feeling for the little children of a member of the crew. They lost their mother in a motor mishap) and a desire to learn from history are clear "tools" for our continued survival as a nation, despite the gloom that surrounds the country today on every side.

## Our Educational Malaise

Four out of five of the world's children, live, we are told, in developing countries. In the next ten years, the entire increase in the world's school going population will centre in the Third World where, it is said, only half the children of school age attend school.

In this educational scenario in the Third World, Sri Lanka's educational future is becoming increasingly a matter of great concern.

The percentage of literacy in Sri Lanka has, according to recent reports, registered a steep decline. From a *second* place which the country once proudly occupied, it has now slipped to the *fourth* place, after Japan, Thailand and the Phillippines.

The reason for this unfortunate gradient is not far to seek. Schools today have become an intrusion for the children and not a real part of living and growing up.

Parents send letters to the Principals, asking the authorities to excuse their children from sports or any other kind of activity which would consume much of their "valuable time". Even school Time Tables have, in many instances, to be adjusted to meet, the demands of established "tutories", and the convenience of some members of the academic staff who are involved in the running of these 'tutories'.

Mr. S. Natesan, Q. C. speaking at the Colombo Hindu College Prize Giving, has put his finger on the core of our educational malaise.

Said Mr. Natesan :- "A school comprises Principal, teachers and students. These three sections live together, share their experiences and advance together. It is the interaction among these three sections that develop the tradition of each school".

The diagnosis has been made with a clarity which requires no further elucidation. *The nurture of the school* was a potent factor in education at one time. Even if the students failed to be successful in examinations, the nurture stood them in good stead.

Time was, we remember, in the fifties and early sixties when university aspirants spent one whole term in the school libraries and laboratories preparing themselves for their practical examinations and their *viva voce* for which those who satisfied the examiners in the theory papers, would be called.

The elimination of the need for school nurture as a necessary element in the educational process is the greatest trajedy of our time.

An educationist has said that there is only one way by which we can distinguish between good schools and bad schools. It is the 'sound' of the school that gives an idea of its worth.

We have to recapture today in Sri Lanka the 'sound' of some of our schools which moulded the lives and career of many of our contemporary leaders who today determine our nation's destiny.

## Two Eminent Indian Educationists

India has lost two outstanding Indian Educationists in recent months.

*Dr. Chandran D. S. Devanesan*, died in Madras on December 19, 1982. He was 65 years old. He was the first Indian Principal of Madras Christian College, Tambaram and was appointed Vice-Chancellor of the North Eastern Hill University of Shillong in January 1974. He founded in 1979, the Institute of Development Education in Madras.

He was a prolific writer, a popular speaker and also a poet who had a volume of verse to his credit.

Dr. Devanesan had close Sri Lankan ties. He had his early education at Kingswood College, Kandy. His wife, Norma is a sister of Mr. Leslie Goonewardene. Of his three sons, one is married to a grand-daughter of the former Principal of the Government Training College, Colombo — Mr. A. J. R. Vethavanam.

Dr. Devanesan has been to Jaffna on many occasions. He was the Chief Guest at the *Union College* Prize Giving on the 14th of March, 1952. He was then Professor at the Madras Christian College. His last visit to Jaffna was in 1980 when he was invited by *Jaffna College* to open the Daniel Poor Library on 31-5-80.

*Dr. S. P. Adinarayan*, former Vice-Chancellor of the Annamalai University died at Ottawa in Canada on 13-12-82. He was 78 years old.

He had a brilliant academic career and worked for some time as Professor of Philosophy at the Madras Christian College. He joined the Annamalai University in 1957 as Head of the Department of Philosophy. He was appointed Vice-Chancellor in 1969 and held the office for seven years.

He is the author of several books on Philosophy and Psychology. He was invited to the USA three times as Visiting Professor. He is survived by his wife two daughters and a son.

## Mr. Alfred Thambiaiyah Remembered

At a Commemorative Meeting held recently, presided over by Mr. K. Ratnam, M. P. for Kayts, Mr. A. Amirthalingam, Leader of the Opposition said that the late Mr. Alfred Thambiaiyah's services could never be forgotten or undermined even by his political opponents.

He helped to send Tamil refugees from Colombo to Kankesanthurai by ship during the 1958 racial riots and Sinhala refugees from Jaffna to Colombo.

The causeway linking Kayts to Pungudutivu was completed during his time. The Central Schools opened by him continue to be the main educational institutions today in the Kayts electorate.

*In brief*

- *Car owners*: According to a news item, in Sri Lanka today, one in 132 persons owns a car.
- *Gandhi Film.* The 22 million dollar Anglo - Indian Film, "Gandhi" has won 11 Oscar award nominations, which included one for best actor Ben Kingsley who played the part of the Indian leader. The Director of the Film is Richard Attembrough who has spent 20 years to produce the film.
- *The Karaveddi Centre Gramodhya Sabha* has passed a resolution urging the Minister of Education to establish a Girls' School to cater to the needs of Karaveddi, Thunnalai, Karanavai, Nelliaddy and Vadery. The present Sacred Heart College has been suggested as a centre for such a school. Mr. E. Muthuthamby presided over the Public meeting held in this connection.
- *The Rev. Dennis Dulton* of Wesley Church Kuala Lumpur has been awarded a Doctorate by the New York Theological Seminary. Mr. Dulton is the Moderator of the CCA Programme Committee on Development and Service.


JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
VADDUKODDAI.

**VACANCIES**

*Lecturer in*: Mechanical Engineering
Electrical Engineering
Civil Engineering

Prospective candidates should have a degree or equivalent qualification in the respective Engineering field. Graduates awaiting results can apply.

*Salary*: Total remunerations will be about Rs. 1,800/- to Rs. 2,900/- per month all inclusive. Honours graduates will receive Rs. 1,960/- to 3,220/-.

A point of the salary scale may be offered according to qualifications and experience.

Apply with full bio-data and two referees to Director, Jaffna College Technical Institute Vaddukoddai before the 25th March, 1983.

**Director.**


*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 25th February 1983 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.